**திஸ்ஸமஹாராம பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,692,496 இற்கான நிலுவை ஓய்வூதிய பங்களிப்புத் தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும் என. | பொறுப்புக்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 9,586,062 தொகைக்கான காணிகள் மற்றும் கட்டிடங்களின் நவீனமயப்படுத்தும் செலவு நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும் என. | மூலதனச் செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தினால் ரூபா 62,915,634 இற்கான செலவில் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த பன்னேகமுவ புதிய வாராந்தச் சந்தைக் கட்டிடம் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும் என. | சொத்துக்களை சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 935,476 இற்கான நிர்மாண வேலை உதவி கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும் என. | கடன்பட்டோர் சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | முன்னைய ஆண்டின் போது எல்லகல விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைக்காக கிடைத்திருந்த ரூபா 899,975 இற்கான தொகையொன்று மீளாய்வாண்டின் மூலதன உதவியென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும் என. | மீளளிப்புச் செய்யக்கூடிய செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | முன்னைய ஆண்டின் போது தெபரவெவ பொது விளையாட்டுத் திடலில் விளையாட்டு வீரர்களின் ஓய்வறை நிர்மாணித்தலுக்கான ரூபா 1,773,936 இற்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும் என. | கொடுப்பனவுகளை சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | 2020 ஆண்டின் போது கடையறை வாடகைக்கு கொடுக்கும் போது அறவிடப்பட்ட ரூபா 1,570,000 இற்கான ஒரே தடவையில் பெறும் பணம் வருமானம் என கணக்கீடு செய்யாமல் கடை வாடகை வைப்பு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது மாகம்பத்து புராணம் என்ற கிரந்தத்தின் விற்பனை மூலம் கிடைத்திருந்த ரூபா 67,000 தொகை வருமானம் பலவின வைப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | சபையின் நூலக வாசகர்களிடம் அறவீடு செய்யப்படும் திருப்பிச் செலுத்தப்படாத வைப்புக்கள் ரூபா 168,420 தொகை நூலக வைப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | முன்னைய மற்றும் மீளாய்வு ஆண்டில் மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொண்டிருக்காமையால் மீளளிப்பு செய்யப்படாத வீதி விளக்கு பராமரிப்புக் கட்டணம் ரூபா 469,777 தொகை பெற வேண்டிய வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றேன் என. | வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஓ) | மீளாய்வாண்டுக்காக ஒரு சதவீதம் (1%) வரி வருமானம் சிட்டையிடும் போது 02 ஹோட்டல்களில் இருந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 258,006 தொகை சிட்டையிடப்பட்டிருக்காமையால் வரி வருமானம் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றேன் என. | வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 3,995,500 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றேன் என. | வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (க) | 2015 மற்றும் 2017 ஆண்டுகளின் போது கிடைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 337,994 தொகைக்கான இரண்டு மதிப்பளிக்கப்படாத காசோலைகள் உரிய தரப்பினரை இனங் கண்டு கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்யாமல் மதிப்பளிக்கப்படாத காசோலைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றேன் என. | வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ங) | 2023 ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 310,561 தொகை ஆண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 கணக்குகளில் மூலம் சரி செய்யப்படும் என. | ஆண்டிற்குரிய செலவு மாத்திரம் ஆண்டின் போது கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ச) | 2018 மற்றும் 2019 ஆண்டுகளுக்கான முத்திரைக் கட்டண அட்டவணைகள் தயாரிப்பதற்காக பதிவாளர் நாயகத் திணைக்களத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 79,200 இற்கான தொகை மீளாய்வாண்டின் செலவு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | 2023 கணக்குகளில் மூலம் சரி செய்யப்படும் என. | ஆண்டிற்குரிய செலவு மாத்திரம் ஆண்டின் போது கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 84,737,038 தொகைக்கான 05 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அதற்குரிய துணைப் பதிவேடுகள் / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 436,323 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | அடுத்த வருடத்திற்குரிய பெறுவனவுகள் ஆண்டிற்கான பெறுவனவுகள் என காட்டப்படல் வித்தியாசத்திற்கான காரணம் எனவும், எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகள் சரி செய்ய வேண்டும். |

### 1.6.3 கணக்காய்வுக்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை மூலதன உதவி ரூபா 1,894,757 தொகை தொடர்பாக அட்டவணைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு சமர்ப்பித்திருக்கவில்லை. | எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பித்து சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம் பிரிவு 134(2) | சபைக்கு உரிய வீதவரி எல்லையை விரிவாக்குவதற்காக 2013 மற்றும் 2018 ஆண்டுகளின் போது 10 கிராம சேவகர் பிரிவுகள் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என இனங் கண்ட போதிலும் அந்த பிரதேசங்களை வெளியிடுவதற்கு தேவையான தொடர் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | 2023 ஆண்டு முதல் வீதவரி முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை பெயரிடும் அலுவல்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன என. | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 1946 இன் 30 ஆம் இலக்க வரிகள் மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்தல் கட்டளைச் சட்டத்தின் பிரவு 20 | வீதவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யாமல் மீளாய்வாண்டின் போதும் 2007 ஆண்டின் பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் வரி அறவீடு செய்யப்பட்டுக் காணப்பட்டது. | வீதவரி ஆதனங்கள் பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. | கட்டளைச் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் விதி 33, 34 மற்றும் 35 | வீதவரி செலுத்துவதை புறக்கணிக்கும் நபர்கள் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வீதவரி செலுத்துவதை புறக்கணிக்கும் நபர்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | விதிக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதியப் பிரமாணம் 371 | 2012 மற்றும் 2013 ஆண்டுகளின் போது சபையின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 97,667 இற்கான முற்பணத்தை தீர்த்திருக்காததுடன், நிலுவைத் தொகையில் இனங் காணப்படாத ரூபா 57,771 இற்கான மீதியொன்றும் காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | 2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 இலக்கம் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பந்தி IV | 2022 ஆண்டு ஒக்தோபர் 06 திகதி வரை ரூபா 157,380 இற்கான விடுமுறை நாள் சம்பளம் கொடுப்பனவு செய்யும் போது சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. | ஓட்ட அட்டவணையின் மூலம் அந்த விடுமுறை நாட்களில் சேவைக்கு உள்வருதல் வெளிச்செல்தல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 2,342,531 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 1,194,804 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 3,132,086 | 3,144,139 | 3,458,490 | 4,644,329 | 3,500,690 | 3,653,246 | 2,160,998 | 4,958,680 |
| வாடகை | 15,139,002 | 14,083,204 | 14,810,927 | 8,123,748 | 16,050,100 | 15,106,015 | 5,838,550 | 8,851,471 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 5,207,392 | 8,819,563 | 9,384,628 | 914,986 | 8,187,000 | 6,974,153 | 5,676,453 | 1,480,050 |
| ஏனைய வருமானங்கள் | 12,249,876 | 11,661,818 | 11,360,192 | 1,307,427 | 9,606,876 | 11,761,599 | 11,439,877 | 1,005,801 |
| மொத்தம் | 35,728,356 | 37,708,724 | 39,014,237 | 14,990,490 | 37,344,666 | 37,495,013 | 25,115,878 | 16,296,002 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 3704 வீதவரி அலகுகளில் இருந்து பெற வேண்டிய வீதவரி ரூபா 3,814,028 தொகையினை அறவீடு செய்வதற்கு பிரதேச சபை சட்டத்தின் 158(1)(அ) பந்திக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை எதிர் காலத்தில் அறவீடு செய்வதற்கு மற்றும் செலுத்தாதவர்களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 229 வியாபார மற்றும் கைத்தொழில் அலகுகளில் இருந்து வியாபார மற்றும் கைத்தொழில் வரி ரூபா 534,360 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய முன்னைய ஆண்டிற்கான களியாட்ட வரி ரூபா 295,940 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவையை அறவீடு செய்வதற்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 330 கடையறைகளில் இருந்து பெற வேண்டிய கடை வாடகை ரூபா 6,326,815 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவையை செலுத்தாத கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 03 வாராந்த சந்தைகளிலிருந்து பெற வேண்டிய வாடகை ரூபா 1,657,590 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 775,455 தொகையினை பதிவழிப்பதற்கு ஆளுனரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டதுடன், மீதியான நிலுவையை பாதுகாப்பு பிணை வைப்பிலிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | சபையினால் வாடகையாளருடன் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறி சபைக்கு சொந்தமான திஸ்ஸ நகர சபையின் 07 கடையறைகள் துணை வாடகை கொடுக்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கைகள் மீறிய வாடகையாளர்கள் தொடர்பாக சபை முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (எ) | அனைத்து உடன்படிக்கைகளும் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்கு சொந்தமான 140 கடையறைகள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்காததுடன், உடன்படிக்கையை நாளதுவரை ஆக்காத காலவீச்சு 02 வருடங்களுக்கும் 31 வருடங்களுக்கும் இடைப்பட்டு காணப்பட்டது. | எதிர்காலத்தில் நடமாடும் சேவை நடாத்தி உடன்படிக்கை கையொப்பமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய மோட்டார் வாகன வாடகை வருமானம் ரூபா 337,400 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், நிலுவைத் தொகையில் ரூபா 311,400 தொகை 2014 ஆண்டிற்குரியதாகும். | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய குப்பை அகற்றும் கட்டணம் ரூபா 364,750 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், நிலுவைத் தொகையில் ரூபா 334,750 தொகை முன்னைய ஆண்டிற்குரியதாகும். | நிலுவைத் தொகை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஒ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத்த தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 1,133,287 தொகை மற்றும் ரூபா 7,970,592 தொகையாகக் காணப்பட்டது. | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவைத் தொகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்வேறு கைத்தொழில்களுக்காக வழங்கப்பட்ட 59 சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் மிகைத்திருந்ததுடன், அந்த அனுமதிப்பத்திரத்தை புதுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் சபை 2022 ஆண்டின் போது இழந்திருந்த வருமானம் ரூபா 177,000 தொகையாக இருந்தது. | கைத்தொழில் உரிமையாளர்கள் விரைவாக அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என. | வர்த்தமானிக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------- | --------------------------------- | ------------------------------ |
| (அ) | சபையினால் பயன்படுத்தப்படும் 06 வாகனங்களின் பதிவு செய்யப்பட்ட உரிமை மற்றும் 72 காணிகள் மற்றும் கட்டிடங்களின் சட்டரீதியான உரிமை மீளாய்வாண்டு இறுதியளவிலும் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை. | 28 காணிகள் மற்றும் கட்டிடங்களை உரித்தாக்குவதற்கு பிரதேச செயலாளருக்கு விண்ணப்பிக்கப்பட்டதெனவும், மீதியான ஆதனங்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமை உரித்தாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2012 ஆண்டிற்கும் மீளாய்வாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் ஓட்ட நிலையிலிருந்த அகற்றப்பட்டிருந்த 11 வாகனங்களின் திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன் என. | ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களின் திருத்த வேலை மேற்கொள்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | துண்டுக் கற்கள் தயாரிக்கும் இயந்திரம், கல் அறைக்கும் இயந்திரம் மற்றும் 50 கிலோ கொள்திறனுடைய 02 போல்வீல் | துண்டுக் கற்கள் தயாரிக்கும் இயந்திரம மற்றும் கல் அறைக்கும் இயந்திரத்தை ஏல | விளைவற்றுக் காணப்படும் சொத்துக்களை திருத்த வேலை மேற்கொண்டு |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரங்கள் என்பன நீண்ட காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டதுடன், அவற்றை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விற்பனையில் விற்பனை செய்வதற்கும் 50 கிலோ கொள்திறனுடைய 02 போல்வீல் இயந்திரங்களை களிமண் கைத்தொழிலுக்கும் வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | பயன்படுத்துவற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நேர் உழைப்பு அடிப்படையில் மேற்கொள்ளும் போது முடிவுற்ற வேலை பெறுமதியில் 20 சதவீதம் சபையில் மீதியாக வைத்திருக்காமையால் நிர்மாண வேலை நேர் உழைப்பு அடிப்படையில் செயற்படுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 691,537 தொகை சபை நிதியத்திற்கு நட்டம் ஏற்பட்டது. | நிர்மாண வேலைகள் நேர் உழைப்பு அடிப்படையில் மேற்கொள்வதற்காக சபையின் அங்கீகாரம் கிடைத்திருந்ததென. | நேர் உழைப்பு அடிப்படையின் மீது நிர்மாண வேலைகள் மேற்கொள்ளும் போது முடிவுற்ற வேலையின் பெறுமதி 20 சதவீதம் சபையில் மீதியகா வைத்திருக்க வேண்டும். |
| (ஆ) | பன்னேகமுவ கொவி செவன விளையாட்டுத் திடலை சுற்றி 08 மின்விளக்குக் கம்பங்ளை நிறுவுவதற்கான நிர்மாண வேலை சபையினால் நிறைவேற்றுவதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 907,650 தொகை செலவிடப்பட்டு நிர்மாண வேலைப் பண்டங்கள் கொள்வனவு செய்திருந்த போதிலும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் 08 மின்விளக்குக் கம்பங்கள் நிறுவியிருக்கவில்லை. அதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 32,200 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த பண்டங்கள் குறிப்பிட்ட வேலைக்காக பயன்படுத்தப்படாமல் தனிப்பட்ட முறையில் பயன்படுத்தப்பட்டிருந்தது. | 27 அடி 04 மின்விளக்குக் கம்பங்கள் நிறுவுவதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பண்டங்கள் பெற்ற பின்னர் 57 அடி 4 மின்விளக்குக் கம்பங்கள் தயாரிப்பதற்கு நேரிட்டமையால் இவ்விடயம் மேற்கொள்வதில் தாமதம் அடைந்ததுடன், தனிப்பட்ட முறையில் பயன்படுத்தாமல் வேறு நிர்மாண வேலையொன்றிற்காக பயன்படுத்தப்பட்டதென. | நிர்மாண வேலை குறிப்பிட்ட கால எல்லையுள் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன், குறிப்பிட்ட விடயங்கள் முறைப் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | எல்லகல விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்வதற்காக திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்தின் ஏற்பாடுகளை பயன்படுத்தி செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டு ரூபா 1,415,975 தொகை கொடுப்பனவு செய்த போது பிரதேச செயலகத்தினால் சபைக்கு மீளளிப்பு செய்த தொகையை விட ரூபா 306,025 தொகை சபை நிதியத்தில் இருந்து மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. மண் போக்குவரத்துக்காக மற்றும் எஸ்கவேடர் இயந்திரம் எடுத்துச் செல்லும் கட்டணமாக ரூபா 128,000 மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணம் 260(1) முரணாக வாகன வாடகையாக ரூபா 1,276,000 தொகை அந்த சேவை வழங்கிய தனியார் நிறுவனத்திற்கு | மீதித் தொகையை மீளளிப்புச் செய்வதற்காக ஞாபகப்படுத்தல் கடிதம் அனுப்பப்பட்டதுடன், முடிவுற்ற வேலை அறிக்கை தயாரிக்கும் போது தவறுதலாக ஏற்பட்டது எனவும் மற்றும் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் மேற்கொள்ளாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மிகைக் கொடுப்பனவுகள் பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களுடன் அறவிடப்பட வேண்டியதுடன், நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்காமல் சபையின் தொழிலநுட்ப உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | பிரதேச செயலகத்தின் ஏற்பாடுகளின் கீழ் பன்னேகமுவ கொவி செவன விளையாட்டுத் திடலின் வலை வேலி நிர்மாணிக்கும் நிர்மாண வேலை நேர் உழைப்பு அடிப்படையில் சபையினால் செயற்படுத்தப்பட்டு ரூபா 1,549,500 இற்கான முடிவுற்ற வேலை அறிக்கை தயாரிக்கப்பட்டு ரூபா 1,353,907 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. இந்த நிர்மாண வேலை நேர் உழைப்பு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டமையால் ரூபா 343,800 தொகை சபை நிதியத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது. இந்த நிர்மாண வேலையின் கீழ் ரூபா 58,100 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த பண்டங்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் வலை வேலி நிர்மாணிப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மதிப்பிடப்பட்ட வேலியின் அளவினை விட கூடுதலாக பூர்த்தி செய்யப்பட்ட வேலியின் நீளத்தின் அளவு அதிகரித்திருந்தமையால் கூடுதலான தொகையொன்று செலவிடப்பட்டதெனவும் மற்றும் கொள்வனவு செய்திருந்த பண்டங்கள் தற்போது களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும். | நேர் உழைப்பு அடிப்படையில் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளும் போது முடிவுற்ற வேலைகளின் பெறுமதியில் 20 சதவீதம் சபையில் மீதியாக வைக்க வேண்டியதுடன், நிர்மாண வேலைக்காக தேவையான பண்டங்கள் மாத்திரம் கொள்வனவு செய்ய வேண்டும். |
| (உ) | பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் காணப்படும் 20 விளையாட்டுத் திடல்கள் மற்றும் மயானங்களை இயந்திரங்களைப் பயன்படுத்தி காட்டினை வெட்டி அப்புறப்படுத்துவதற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் மதிப்பீடு மற்றும் முடிவுற்ற வேலை அறிக்கை தயாரிக்காமல் ரூபா 1,285,200 தொகை மற்றும் இயந்திரத்தின் போக்குவரத்துக்காக ரூபா 84,340 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன் என. எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிர்மாண வேலைக்காக தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீடு மற்றும் முடிவுற்ற வேலை அறிக்கை மீது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | சபை நிதியத்தில் இருந்து நேர் உழைப்பு அடிப்படையில் அகுருகொட உத்தியோகபூர்வ வாசஸ்தளத்தை சுற்றி வலைவேலி நிர்மாணிக்கும் நிர்மாண வேலையின் கீழ் PVC வலைவேலி 180 மீற்றர் நீளத்தில் செய்யப்பட்டதென குறிப்பிட்டு ரூபா 727,709 தொகைக்கான பண்டங்கள் கொள்வனவு செய்வதற்காக மற்றுமு ரூபா 19,600 தொகை உழைப்பு என கூட்டுத்தொகை ரூபா 747,309 இற்கான செலவொன்று வேற்கொள்ளப்பட்டிருந்தது. PVC வலைவேலி 102 மீற்றர்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தமையால் இந்த நிர்மாண வேலைக்காக ரூபா 323,833 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | இந்த நிர்மாண வேலை இரண்டு கோப்புக்கள் மூலம் செயற்படுத்தப்பட்டு பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வேறொரு நிர்மாண வேலைக்காக பயன்படுத்தப்பட்டதென. | மிகையாக செலுத்தப்பட்ட தொகை பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | பன்னேகமுவ வாராந்த சந்தை வளாகத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,125,216 தொகை சபையினால் செலவிடப்பட்டிருந்ததுடன், அந்த செலவுகளில் 51 நாட்களுக்கான ரூபா 102,000 தொகை மிகை உழைப்புக்காக செலுத்தப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய உழைப்பினை மிகைத்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளக்கூடாது என. | மிகையாக செலுத்தப்பட்ட தொகை பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | பொது விளையாட்டுத் திடல்களை அபிவிருத்தி செய்தல் - 2021 நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெபரவெவ பொது விளையாட்டுத் திடலில் விளையாட்டு வீரர்களின் ஓய்வுமண்டபம் நிர்மாணிக்கும் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்ட தடுத்து வைத்தல் பணத்தை கழித்து ரூபா 3,716,971 தொகை ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கட்டிடத்திற்கு நீர் இணைப்பு பெற்றுக்கொள்வதற்காக ரூபா 60,614 தொகை மிகையாகவும் மற்றும் 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.2 இற்கு இணக்கமின்றி ரூபா 169,599 தொகை விலை முரண்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிர்மாண வேலையின் தடுத்து வைத்தல் பணம் கிடைத்த பின்னர் இந்த தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மிகையாக செலுத்தப்பட்ட தொகை பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | பன்னேகமுவ ஆலோக மாவத்தை ஆரம்பத்தில் இருந்து திரு ஜயவர்த்தன அவர்களின் வீடு வரை பாதையில் இணைத் தொடர் கற்கள் பரப்புவதற்காக நிர்மாண வேலையின் இணைத் தொடர் கற்கள் நியம வலு காணப்படாத போதிலும் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,731,840 தொகைக்கான செலவுகள் ஆக்கபூர்வமற்ற கொடுப்பனவாக காணப்பட்டமையால் அது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் சபை முகாமையினால் மீளாய்வாண்டின் போதும் எடுத்திருக்கவில்லை. | இரண்டு சந்தர்ப்பங்களிலும் தரப் பரிசோதனை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட போதிலும் வழங்கியிருந்த அறிக்கைகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக காணப்பட்டமையால் அது தொடர்பாக விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | உரிய நியமங்களுக்கு இணங்க நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறன்றேல் பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் நட்டத்தை அறவீடு செய்ய வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி (பொ.நி.சு 25/2014 ஊழியர்களும் உட்பட) முறையே 104 மற்றும் 86 தொகையாக காணப்பட்டதுடன், 20 ஊழியர் மிகைகளை முறைப்படுத்திக்கொள்வதற்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதியான பதவிகளை முறைப்படுத்திக்கொள்வதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | மிகைகளை முறைப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |